## முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

COS.No.38/2023 பெயர் : பக்தவச்சலம் நாள் :03.11.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா. 1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

என்னிடம் காட்டப்படுவது அசல் வழக்கு எண்.322/2020 நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரை என்றால், எனக்கு படிக்கத் தெரியாது, அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது வா.சா.ஆ.14 ஆகும். அதேபோல் என்னிடம் காட்டப்படுவது COS.36/2023 என்ற வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை என்றாலும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றாலும், சரிதான். அது வா.சா.ஆ.15 ஆகும். மேற்படி இரண்டு வழக்குகளிலும் நான் பணம் கட்ட வேண்டும் என தீர்ப்பாகியுள்ளது என்றால், சரிதான். அதை எதிர்த்து மேல்முறையீடு நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அசல் வழக்கு எண்.322/2020 நான் எதிர் வாதம் தாக்கல் செய்த போது, எனக்கும், சசிக்குமாருக்கு இடையே நடந்த வரவு, செலவு கணக்குகளை முழுவதும் குறிப்பிட்டு தான் எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. COS.36/2023 என்ற வழக்கில் நான் எதிர் வாதம் தாக்கல் செய்த போது, முழு விபரம் குறிப்பிட்டு தான் எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள விபரங்கள் முற்றிலும் பொய்யானது என்றாலும், இந்த வழக்கின் வாதி மகேஷ்குமாரின் தொகையை ஏமாற்ற வேண்டி,

பொய்யாக சங்கதிகளை குறிப்பிட்டு எதிர் உரை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. அவ்வாறு நான் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மையாக இருந்திருந்தால், ஏற்கனவே நடந்த இரு வழக்குகளின் எதிர்வாதத்தில் உண்மையை குறிப்பிட்டிருப்பேன் என்றால், சரியல்ல. என்னுடைய எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும், தாவாப்படி நான் தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என்றாலும், சரியல்ல.